ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு

## உங்கள் உற்பத்திப் பொருட்களுக்காக ஒரு நியாயமான வர்த்தகம் தொடர்பான சான்றிதழைப் (Fair Trade certification) பெற்றுக் கொள்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்

நிலையான பொருளாதார அபிவிருத்திக்கான ஆயுதமாக இனங்கண்டுள்ள வியாபார சான்றிதழைக் கொண்டுள்ள உற்பத்திகளுக்காக தற்போது நிலவும் அதிகரித்த கேள்வியை கருத்திற்கொண்டு இலங்கை உற்பத்தியாளர்களின் நியாயமான வர்த்தகம் தொடர்பான சான்றிதழைப் பெற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### நோக்கு

- நியாயமான வர்த்தக சான்றிதழ் பெற்ற இலங்கை உற்பத்தியாளர்களைப் பெருக்குவதன் மூலம் நிலையான உற்பத்தியை மேம்படுத்தல்
- விசேட உற்பத்திச் சந்தையில் (niche market segments) இலங்கை உற்பத்திப் பொருட்களை ஊக்குவித்தல்

### யாருக்கு

2018 ஜனவரி 01ஆம் திகதி முதல் 2018 நவம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உற்பத்தி தொடர்பாக நியாய வர்த்தக சான்றிதழைப் பெற்றுக் கொண்ட அல்லது பெற்றுக் கொள்ள எதிர் பார்க்கும் உற்பத்தியாளர்களிடமிருந்து இது தொடர்பாக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

### EDB எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பு

நியாய வர்த்தகம் தொடர்பான சான்றிதழைப் (பகுதி அல்லது முழுமையான சான்றிதழ்) பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்பட்ட தொகையிலிருந்து சதவீத மொன்றை மீளப் பெற ஏற்றுமதி அபிவிருத்திச் சபை எதிர்பார்க்கின்றது.

### விண்ணப்பித்தல் மற்றும் தெரிவு செய்யப்படல்

விண்ணப்பங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப உற்பத்திப் பிரிவிலிருந்தும் (6ஆம் மாடி) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகங்களிலிருந்தும் அல்லது www.srilankabusiness.com என்ற இணையத் தளத்தின் Announcement ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் பணிப்பாளர் தொழில் நுட்பவியல் உற்பத்தி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு 2018 ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நியமிக்கப்படும் தெரிவுக் குழுவொன்றின் மூலம் ஒத்துழைப்பு வழங்க தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

மேலதிக விபரங்களுக்காக அபிவிருத்தி அதிகாரி, திருமதி மங்களா மதுவந்தி அவர்களைத் தொடர்புகொள்ளுங்கள். 2300705-11, பெக்ஸ் 011-2303025, ஈமெயில் **mangala@edb.gov.lk**

**தலைவி மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**42, நவம் மாவத்தை, கொழும்பு-02.**
www.srilankabusiness.com